பேராசிரியர்


# அழகையா துரைராஜா

அவர்களின்

# 14 வது நினைவுப் பேருரை

## கல்வியும் ஆசிரியத்துவமும்

11-06-2008




**வழங்கியவர்: பேராசிரியர் க. கந்தசாமி**

பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

பழைய மாணவர் சங்கம் நடாத்தும்,

முன்னாள் சங்கத் தலைவரும் உலகின் சிறந்த கல்விமான்களில்

ஒருவருமாகத் திகழ்ந்தவருமாகிய

# பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின்

# 14வது நினைவஞ்சலிக் கூட்டம்

தலைவர் : திரு.க. சண்முகசுந்தரம்

இடம் : உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மண்டபம்

காலம் : 11.06.2008 புதன்கிழமை மு.ப 10.30மணி

## நினைவுப் பேருரை வழங்குபவர்

பேராசிரியர் க. கந்தசாமி

(பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புகள் பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

## நிகழ்ச்சிநிரல்

**மங்கள விளக்கேற்றல்.**

**இறைவணக்கம்**

**உருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்துதல்**

**வரவேற்புரை**

**தலைவர் உரை**

**அதிபர் உரை**

**நினைவுப் பேருரை வழங்கல்**

**"கல்வியும் ஆசிரியத்துவமும்"**

**நினைவுப் பரிசில் வழங்கல் : 2007**

1. க.பொ.த (உ.த) பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் கணிதத் துறையில் அதியுயர் பெறுபேறு பெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவன்.

   **செல்வன் - விமலநாதன் - ரஜீவன்** (மாவட்டநிலை -1)

2. க.பொ.த.(உ.த) பரீட்சையில் எமது கல்லூரி மட்டத்தில் கணிதத் துறையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவன்.

   **செல்வன் - இராமகிருஷ்ணன் - சஜந்தன்** (மாவட்டநிலை -2)

**நன்றியுரை**

மேற்படி நிகழ்வில் தவறாது சமுகந்தந்து சிறப்பிக்குமாறு
போராசிரியர் அ. துரைராஜாவின் அபிமானிகள் அனைவரையும்
அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உடுப்பிட்டி. அ.மி.கல்லூரி,
வல்வெட்டித்துறை.

**பழைய மாணவர் சங்கம்.**

# தலைவர் உரை

1988ம் ஆண்டு காலப்பகுதியில் கல்வி, கட்டட வசதிகள் யாவற்றிலும் எங்கள் கல்லூரி அதிகளவு பாதிப்பிற்குட்பட்டு அழிவின் விழிம்பில் தத்தளித்துக்கொண்டிருந்தது. திரு.க.சிதம்பரப்பிள்ளை அவர்கள் இக்கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றார். அழிவின் கொடும்பிடியிலிருந்து கல்லூரியை மீட்டெடுக்கும் பணி அவர் தலையில் விழுந்தது. அப்போதுதான் யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக பேராசிரியர் அவர்களும் நியமனம் பெற்றார். 'பழைய மாணவர்கள் கல்லூரிக்கு ஆற்றவேண்டிய சேவையை' உணர்ந்த அதிபர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் பேராசிரியரையும் கல்லூரிப்பணிகளில் ஈடுபடுத்தினார். இவ்விருவர்களும் இக்கல்லூரியில் ஒரே வகுப்பில் கல்விகற்ற ஆத்ம நண்பர்கள். நட்புக்கரம் உரிமையுடன் அழைத்ததை நிராகரிக்காது எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைமைப் பதவியை பேராசிரியர் அவர்கள் மிகவிருப்புடன் ஏற்றுக்கொண்டார். சிதைந்து சின்னாபின்னப்பட்ட கல்லூரியை சிகரத்திற்கு உயர்த்தும் நோக்கினைக்கொண்டே இச்சங்கமானது உருவாக்கப்பட்டது.

இச்சங்கத்தின் விரைவான வளர்ச்சிக்கும் கல்லூரியின் உச்ச நிலை முன்னேற்றத்திற்கும் கனடாவாழ், உள்ளூர்வாழ் பழைய மாணவர்களின் அயராத முயற்சியும் அர்ப்பணிப்புமே அத்திவாரமாக அமைந்துள்ளன. இப்போது உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி கற்றோரும் மற்றோரும் மதிக்கும்வகையில் பட்டொளி வீசிப்பிரகாசித்து சாதனைகளை தன்வசப்படுத்தி வீறுநடைபோடுகின்றது என்றால் மிகையாகாது. இத்தகைய வளர்ச்சிக்கு பேராசிரியர் துரைராசாவின் ஊக்கத்திறனும் கனடாக்கிளையினது மனங்கோணாத மகோன்னதமான தொடர் தூண்டலுமே பிரதான காரணிகளாகும். கல்லூரியின் மேம்பாட்டிற்கு ஊக்கியாகத் திகழ்ந்த பேராசிரயர் இயற்கையெய்திய தினம் யூன் 11 ஆகும். இன்றைய நாள் அவரது 14 வது நினைவு தினமாகும். இப்பொன்னாளில் அவர் ஞாபகார்த்தமாக,

01. நினைவுப்பேருரை வழங்கல்.
02. க.பொ.த உயர்தர தேர்வில்,

அ. யாழ் மாவட்டத்தில் கணிதத்துறையில் முதலிடம் பெறும் மாணவனுக்கும்,

ஆ. எமது கல்லூரியில் அதிகூடிய சிறந்த பெறுபேற்றைப்பெறும் மாணவனுக்கும் சன்மானம் வழங்கிக் கௌரவித்தல். ஆகிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பேராசிரியருடன் நன்கு பழகிய கல்விமான் ஒருவரினால் நினைவுப்பேருரை வழங்கப்படுகின்றது.

பேராசிரியர் துரைராசா அவர்களின் புகழினை எழுதத்தொடங்கினால் சீனப்பெருஞ் சுவரே சின்னதாகத்தொரியும். அவர் பயின்ற காலத்தில் கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் சக மாணவர்களால் நெருங்கமுடியாத புலமையும் முயற்சியும் உடையவராக அமைந்திருந்தார். இதன் காரணமாக உயர்கௌரவமான 'கேம்பிறிச் சர்வகலாசாலைக்கு' புலமைப் பரிசில்பெற்று உயர்படிப்பிற்காகச் சென்றார். அங்கு மண்நுட்பப் பொறியியல்துறையில் பட்டம்பெற்று அனைவரும் வியக்கும் வகையில் அத்துறை அறிவியலில் தன்பெயரையும் பதித்துள்ளார். எங்கள் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக இணைந்தபின் தனித்துவ ஆற்றல் காரணமாக உயர்பதவிகளை விரைவாகத் தனதாக்கிக்கொண்டார்.

பேராசிரியர் கல்வித்தகைமையில் உயர்நிலை பெற்றதைப் போல் பண்பு நிலையிலும் உயர்ந்து 'உள்ளத்தாலும் உயர்ந்த உத்தமர்' என மதிக்கப்பட்டார். கற்றவன், கல்லாதவன் என்ற பேதங்கள் மட்டுமன்றி அதிகாரபேதம், வர்க்கபேதமின்றியும் அனைவருடனும் அன்பாகப் பழகினார். தற்பெருமை கடுகளவுமின்றிக் காணப்பட்டதனால் அனைவராலும் நேசிக்கப்பட்டார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தைப்போல சமூக சிந்தனைமிக்க பல்வேறு நிறுவனங்களின் தலைவராகவும், ஆலோசகராகவும் பணிபுரிந்தார். கௌரவமும் புகழும் அவர் பாதத்தை தரிசிக்கத் தவங்கிடந்தன. தமிழுலகில் மாமனிதராகவும் பரிமாணம் பெற்றார். அவரது ஆற்றல்களும் ஏனைய செயற்பாடுகளும் இன்றைய மாணவ சமுதாயத்திற்கு வழிகாட்டியாக, பாடநூலாக, நேர்த்தியான பாதையாக, பண்புமிகு பாசறையாக, தனித்துவமான தாய்மடியாக, கண்ணியமான கலங்கரை விளக்கமாகத் திகழுமென்பது எனது நம்பிக்கை.

**திரு. க. சண்முகசுந்தரம்**

*தலைவர்,*
*பழைய மாணவர் சங்கம்,*
*உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.*

# அதிபருரை

**மகாத்மா போல் உழைத்த மனிதாத்மா**

உலகின் திசைகளைத் திடுக்கிடச் செய்யும் ஆற்றல்மிகு பூமி வடமராட்சி என்றால் அதன் உள்ளார்ந்த அர்த்தத்தை அனைவரும் எளிதில் புரிந்துகொள்வர். இத்தகு மண்ணிலே தோன்றிய அற்புத விருட்சம்தான் பேராசிரியர் அ.துரைராஜா. எடிசன், நியூட்டன், அப்துல்கலாம் போல எளிமையான குடும்பமொன்றிலே தோன்றி தனைவளர்த்தோர் கனவுகளைச் செதுக்கி சிகரம் தொட்டவர் எம் பேராசிரியர். இமையாணன் மண்ணிலே விளைந்த விளைச்சல் யாவற்றிலும் வீரியம்மிகு விளைச்சலாக இவரைக்கொள்ளலாம். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி இவருக்கு உயிர்ப்பூட்டி உன்னதத்தை உயரச்செய்தது.

இங்கிலாந்து சென்று பொறியியல் வல்லுனராக உருவானபோதும் உயிர்கொடுத்த தேசத்தை நோக்கியே அவரது உதிர அணுக்களின் அசைவுகள் அமைந்திருந்தன. 1988ல் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராகப் பொறுப்பெற்றபோது இந்தமண் தன் தவப்பயனை அடைந்தது. இவரது வரலாற்றுப்பணிகளை எடுத்தியம்ப எங்கள் வார்த்தைகளுக்கு வலிமை கிடையாது. இத்தகைய வரலாற்று நாயகனின் நினைவு நாளில் நினைவுப்பேருரை நிகழ்த்தி எங்கள் கல்லூரிதன்னை கௌரவித்துக்கொள்வதாக நாங்கள் கருதிக்கொள்கின்றோம்.

*"பயிர் வளர்க்கும் வாழ்வில் வியர்வைதனைச் சிந்தி*
*உயர்வடைவர் உத்தமர் தான்"*

திரு.K.தருமலிங்கம்.
அதிபர்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
வல்வெட்டித்துறை.

# அமரர் கலாநிதி அழகையா துரைராஜா நினைவுப் பெருரை

## கல்வியும் ஆசிரியத்துவமும்

எமது பல்கலைக்கழகம் கடந்த 34 ஆண்டு காலத்தில் சில துணைவேந்தர்களை, பல கல்விப் புலமையாளர்களை இழந்துள்ளது. அவர்களுள் கருத்து விமர்சனங்களுக்கு அப்பால் கற்றோராலும், மற்றோராலும் இனிது போற்றப்படும் உயர்ந்த மனிதர்களுள் அமரர் அழகையா துரைராஜா அவர்களுக்கு தனியிடமுண்டு. அவர் மறைந்து இன்று 14 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும் எமது கல்விப் பாரம்பரியத்தில் அவரைப்பற்றிய பசுமையான நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கு இன்நினைவுப் பேருரையே சிறந்த எடுத்துக்காட்டாகும். இச்சந்தர்ப்பத்தில் அமரரின் கல்விப்புலமை பற்றியும், அவர் எமது சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் பற்றியும், அவர் மீது எமது சமூகம் கொண்டிருக்கும் மதிப்புப் பற்றியும் ஒருசில நினைவுகளை மீட்டுப்பார்ப்பதில் நான் ஆத்ம திருப்தி அடைகிறேன்.

1934 ஆண்டு வடமராட்சி உடுப்பிட்டியில் உள்ள இமையாணன் கிராமத்தில் பிறந்த அமரர் துரைராஜாவின் வாழ்க்கை ஓட்டம் தமிழ்ப் பஞ்சாங்கம் கூறும் அறுபது ஆண்டுகால வாழ்க்கை வட்டத்திற்குள் அடங்கி விட்டது. ஆயினும் அந்த அறுபது ஆண்டு கால எல்லைக்குள் அவர் சிறந்த மாணவனாக, ஆராய்ச்சியாளனாக பல்கலைக்கழக ஆசிரியனாக, ஆளுமைமிக்க நிர்வாகியாக எமது சமூகத்தின் மத்தியில் பிரகாசித்த உயர்ந்த மனிதர் என்பதில் ஐயமில்லை. உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், பருத்தித்துறை காட்லிக் கல்லூரியிலும் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பயின்ற போது கல்வியில் அவர் பெற்ற சிறந்த பெறுபேறுகளாலும், மாணவனுக்குரிய ஆளுமை, ஒழுக்கநேயம் என்பவற்றாலும் அப்பாடசாலைகளே பெருமை

பெற்றதாக அறிகிறேன். அதற்காகத்தான் அப்பாடசாலைகள் இன்றும் அவரைத் தமது பழைய மாணவன் எனப் பெருமைப்படுத்தி அவரை நினைவுபடுத்திவரக் காரணம் எனக் கருதுகிறேன்.

1953 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு அனுமதி பெற்ற அமரர் 1957 இல் முதலாம் தரத்தில் அதிசிறந்த புள்ளிகளைப் பெற்ற முதல்தர மாணவனாக வெளியேறினார். 1958 இல் பிரித்தானிய அரசின் புலமைப் பரிசில் பெற்ற அமரர் உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றான கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டிருந்தார். அங்கு பேராசிரியர் கே. றோஸ்கோயி (Rosvcoe ) வழிகாட்டலின் கீழ் மேற்கொண்ட மண்ணியல் பற்றிய ஆய்வில் அமரர் முன்வைத்த கருதுகோள்களும், முடிவுகளும் அவருக்குச் சர்வதேசப் புகழைத் தேடிக்கொடுத்தன. அவரது ஆய்வுப் புலமைதான் 1961 இல் கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர் அவர் அந்நாட்டிலேயே சிறிதுகாலம் குடியியல் பொறியியலாளராகக் (Civil Engineer) கடமையாற்றவும், பிற்காலத்தில் அந்நாட்டிலுள்ள வாட்டர்லூ (Waterloo -1969- 70 காலப்பகுதியில்) மற்றும் British Colambia (1977-78 காலப்பகுதியில்) ஆகிய பல்கலைக்கழகங்களில் வருகைதரும் பேராசிரியராகக் (Visiting Professor ) கடமையாற்றவும் காரணம் எனக் கருதுகிறேன்.

1962 இல் இலங்கை திரும்பிய அமரர் அவ்வாண்டிலேயே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். அன்றிலிருந்து 1994ம் ஆண்டில் அவர் அமரத்துவம் அடையும் வரை உள்ள இடைப்பட்ட 32 ஆண்டு காலப்பகுதி அமரரின் சாதனைமிகுந்த காலமாகவே காணப்படுகிறது. இக்கால இடைவெளியில்தான் அவர் விரிவுரையாளர், பேராசிரியர், பீடாதிபதி, உபவேந்தர், இலங்கை விஞ்ஞான சங்க ஆயுள்கால அங்கத்தவர் எனப் பல பதவிகளை படிப்படியாகப் பெற்று புகழின் உச்சிக்கே சென்றார்.

இப்பதவிகளால் அவருக்கு கிடைத்த புகழ், பெருமை, பாராட்டுக்கள் என்பன அமரரின் கல்விப்புலமைக்கு, பட்டறிவுக்கு, நிர்வாகத் திறனுக்கு, ஆளுமைக்கு, மனிதநேயத்திற்குக் கிடைத்த சமூக அங்கிகாரமாகவே நான் பார்க்கிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் உபவேந்தராக பதவி வகித்த ஆறு ஆண்டு (1988-1994) காலத்தை எமது பல்கலைக்கழக வளர்ச்சியின் புதிய கால கட்டமாக நான் நோக்குகின்றேன். துணைவேந்தர் பதவி என்பது பெருமைக் குரியதாக இருப்பினும், அன்றைய காலகட்டத்தில் அது மகிழ்ச்சிக்குரிய பதவியாக அவருக்கு இருக்கவில்லை. அன்றைய அரசியல் சூழ்நிலையில் பல்வேறு இன்னல்களுக்கும், இடர்களுக்கும் மத்தியிலேயே அமரர் அப்பதவியை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார். அவருக்கிருந்த கல்விப்புலமை, நிர்வாகத்திறன், வெளியுலகத் தொடர்பு என்பவற்றால் மனஅமைதி தரக் கூடிய உயர்ந்த பதவியைப் பெறும் வாய்ப்பும், தகமையும் அவருக்கு இருந்தது. ஆனால் இந்நாட்டையும், எம்மக்களையும் அதற்கும் அப்பால் சொந்த மண்ணில் சேவையாற்ற வேண்டும் என்ற ஆதங்கமும் அவரிடம் காணப்பட்டதால் இப்பதவி அவருக்கு மனநிறைவைக் கொடுத்தது. அவர் பதவி வகித்த ஆறு ஆண்டு காலத்தில் பெரும்பாலும் குடாநாட்டில் அமைதியற்ற சூழ்நிலையே காணப்பட்டது. மின்சாரமின்மை, எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து வசதியின்மை, உணவுத்தட்டுப்பாடு என்பன அன்று சாதாரண நிகழ்வாகவே இருந்தன. ஆயினும் இந்த அசௌகரியங்களை எல்லாம் அமரர் பொருட்படுத்தாது துணைவேந்தர் பதவிக்குரிய அனைத்துப் பணிகளையும் மிகச் சிறப்பாகச் செய்த பெருமைக்குரியவர்.

எமது பல்கலைக்கழகத்தின் நோக்கம், வளர்ச்சி அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் என்பன கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி என்ற வட்டத்திற்குள் அமைய வேண்டும் என்பதை நன்குணர்ந்து அவற்றை நடைமுறைப்படுத்திய துணைவேந்தர்களுள் அமரர்

துரைராஜா அவர்களுக்கு தனியிடமுண்டு. இளம் ஆசிரியர்கள் கற்பித்தலோடு நிற்காது ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதற்காக பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி நிதியத்தை ஏற்படுத்திய பெருமை அமரருக்கு உண்டு. அவ்வாறு ஆராய்ச்சி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பெறுபேறுகளில் தரமானவற்றை நூலாகப் பிரசுரிப்பதற்கென அமரரால் நூல் வெளியீட்டு நிதியம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இதனால் அவர் பதவி வகித்த காலத்தில் ஏறத்தாழ 12க்கும் மேற்பட்ட நூல்கள் பல்கலைகழக வெளியீடாக வந்தன. ஆயினும் அவர் ஏற்படுத்திய அவ்வரிய பணிகள் அமரரின் மறைவோடு மறைந்துவிட்டமை வேதனை தருவதாக உள்ளது.

பல்கலைக்கழகங்களில் ஆரவாரமின்றி நிலையான மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமை அமரர் துரைராஜா அவர்களுக்குண்டு. அந்த மாணவ பரம்பரையின் உதவியோடு அமரர் உருவாக்கிய துணைவேந்தர் மாணவ நலநிதியம் அமரின் மகத்தான பணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இன்று எமது பல்கலைக்கழகத்தில் வசதி குறைந்த பல மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு அமரர் ஏற்படுத்திய துணைவேந்தர் மாணவ நலநிதியமும் ஒரு காரணம் எனக் கூறிக்கொள்வதில் பெருமை அடைகிறேன்.

அமரர் கல்வியின் தரம் உயரவும், அதனால் பல்கலைக் கழக மாணவர்களும், சமூகமும் நன்மைபெறவும் ஆக்கபூர்வமான பல திட்டங்களை உருவாக்கி அவற்றுள் சிலவற்றை தனது காலத்திலேயே நடைமுறைப்படுத்திய பெருமைக்குரியவர். அவர் காலத்தில்தான் இன்று பிரபலப்படுத்தப்படும் புறநிலைப்படிப்பு அலகு, தொழிலாளர் கற்றை நெறி, வெளிவாரிப்பட்டப் படிப்பு என்பன தொடங்கப்பட்டன. இதனால் பல மாணவர்கள் பட்டாதாரிக ளாக உருவாகி யிருப்பதுடன், பலர் பல்கலைக்கழக கல்விச் சூழலை அனுபவிக்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளனர். இன்று இராமநாதன் நுண்கலைப் பிரிவு, விவசாயபீடம் என்பன

கல்வித்தரத்தில் உயர்ந்த நிலையில் வளர்ந்து வருவதற்கு அமரரின் காலத்தில் தூரநோக்கோடு ஏற்படுத்தப்பட்ட தீர்மானங்களும், நடைமுறை களும்தான் முக்கிய காரணம் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ் மாணவர்களுக்கு சகல வசதிகளுடன் கூடிய பொறியியல் பீடம் அவசியம் என உணர்ந்து அதற்கு முன்னோடியான திட்டங்களை தனது காலத்தில் உருவாக்கிய பெருமையும் அமரருக்கு உரியதாகும். அவர் வாழ்ந்த காலத்தில் அவர் கண்ட கனவான பொறியியல் பீடம் கிடையாமை தமிழ் மாணவர்களின் துரதிஷ்டமே. அமரர் தமிழ் மாணவருக்கு செய்த நன்மைகளுக்கு அவர் கண்ட கனவான சகல வசதிகளுடன் கூடிய பொறியியல் பீடம் அமைய எம்மால் இயன்றதை செய்வதும் அப்பாடியானதொர் பொறியியல் பீடம் அமையாதவிடத்து அதை தடுப்பதுவுமே நாங்கள் செய்யக்கூடிய கைமாறாகும்.

அமரரின் கல்விப்புலமையும், பணியும் பல்கலைக்கழக வட்டத்திற்குள் மட்டும் அடங்கவில்லை. அதற்கு அப்பால் அவர் சமூகத்தோடு ஏற்படுத்திய உறவும், சமூகத்திற்கு அவர் ஆற்றிய பணிகளும் அவரை எமது சமூகம் உயர்ந்த நிலையில் போற்றுவதற்கு காரணமாக இருந்தன. இதற்கு ஊற்று நிறுவனம் அவருக்கு களமும் அமைத்து கொடுத்ததெனக் கூறலாம். மேலும் அமரரிடம் இயல்பாகவே காணப்பட்ட அன்பு, இரக்கம், மனிதநேயம், புன்சிரிப்பு, வன்சொல்லாமை போன்ற நற்குணங்கள் சாதாரண மக்களையும் கவர்ந்தன எனக்கூறில் மிகையாகாது. அதனால்தான் அவரின் மரணம் ஒரு கல்வியாளனுக்குரியதாக இல்லாது ஒரு சமூகத்தை நல்வழிப்படுத்திய தலைவனுக்குரிய இழப்பாகப் பார்க்கப்பட்டது.

இத்தகைய ஒருவர் எமது பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தது எம் எல்லோருக்கும் பெருமை தருவதாக உள்ளது. அவரின் மறைவு தனிமனித மரணம் மட்டுமல்ல. ஒருசமூகத்தின் பேரிழப்பாகும். மரணம் எல்லோருக்கும்

பொதுவானது. ஆனால் கொடிய இரத்தப் புற்றுநோயால் தனக்கு ஏற்பட உள்ள மரண நாட்களைத் தானே எண்ணிக் கொண்டு இறுதிவரை புன்சிரிப்போடு துணைவேந்தர் பதவியை அலங்கரித்த பெருமை அமரர் துரைராஜா அவர்களுக்கு மட்டுமே உரியதாகும். ஒருவர் மறைந்ததும் நாம் எல்லாவற்றையும் மறந்து அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். ஆனால் ஒருவர் உயிரோடு இருக்கும் போது அவர் நீண்ட ஆயுளோடு வாழவேண்டும் என எல்லோரும் எல்லோருக்கும் பிரார்த்திப் பதில்லை. அப்பாக்கியம் ஒருசிலருக்கு மட்டும் கிடைப்பதுண்டு. அதை அடைந்த பெருமை அமரர் பேராசிரியர் துரைராஜா அவர்களுக்கு உண்டு. அவர் உயிரோடு இருந்த போது அவரின் நீண்ட ஆயுளுக்காக இறைவனைப் பிரார்த்தித்த நாம் இன்று அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கிறோம். அவரை நினைவுகூருவதற்காக அவர் முக்கியத்துவம் கொடுத்த விடையங்களில் ஒன்றை கருப்பொருளாக கொண்டு நினைவுப்பெருரையொன்றை ஒழுங்கமைக்கின்றோம். இந்த வகையில் அவர் தனது வாழ்காலத்தில் பெரிதும் மதித்த கல்வியும் ஆசிரியத்துவமும் என்ற கருப்பொருளில் நான் அறிந்தவற்றை இங்கு கூறலாமென எண்ணுகின்றேன்.

கல்வி என்பது எமது ஆத்மாவுடன் இரண்டறக் கலந்த ஒன்று. அதனால்தான் கற்பதற்குரிய இடங்களை நாம் கோவில்களாக சிலசமயங்களில் இதற்கும் மேலாக சமூகத்திற்காக நாங்கள் தவம் செய்கின்ற தவச்சாலைகளாக பார்க்கின்றோம். நாம் வாழும் யாழ்ப்பாணச் சமூகம் கற்க மறுப்பவர்களை வாழ மறுப்பவர்களாகப் பார்க்கிறது. ஏனெனில் கல்விதான் மனிதனொருவனை அவன் சார்ந்த பண்பாட்டுச் சூழலில் ஆளுமைமிக்க முழுமனிதனாகவும் தான் சார்ந்த சமூகத்துக்கு பயனுள்ளவனாகவும் மாற்றுவதற்கு வழிவகுக்கிறது. தனிமனிதன் ஒவ்வொருவரதும் தனித்துவமான ஆற்றல்களை வளர்ச்சியடையச் செய்வதுதான் கல்வியின் உயர்ந்த நோக்கமாகக் காணப்படுகின்றது. கல்வி வாயிலாக ஒவ்வொருவரும் தத்தம்

இயல்புகளை வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே உருவாக்கும் சிற்பிகளாக மாறுகின்றனர். கல்வியின் வாயிலாக ஒருவர் தனது தலைவிதியைத் தானே உருவாக்க முடிகிறது. இதனால் கல்வி கற்பதற்கு கால எல்லையோ, கற்பதற்குரிய வரையறையோ இன்றி வாழ்நாள் முழுவதும் கல்விகற்கத் தூண்டப்படுகிறான். இருப்பினும் கல்வியின் நோக்கம் கற்பது மட்டுமல்ல. கற்றபடி ஒழுக வேண்டும் என்பதையும் அக்கல்வியே வலியுறுத்துகிறது. இதனால்தான் கல்வி மட்டுமல்ல கல்வியைப் போதிக்கும் ஆசிரியத் தொழிலும் புனிதமாகப் பார்க்கப்படுகிறது. ஒருசில ஆசிரியர்கள் தான் தாங்கள் கற்றபடி வாழ்ந்து சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக மிளிர்ந்துள் ளனர். அப்படியானவர்கள் சமூகத்தால் போற்றப் பட்டதும், தெய்வங்களாக மதிக்கப்பட்டதும் எமது சமூக வரலாற்றில் பதியப்பட்ட உண்மைகளாகும். அப்படியான புனிதமான பதிவுகளின் வெளிப்பாடொன்றுதான் உங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இன்றைய நிகழ்வாகும். இன்றைய நிகழ்வில் அவரது சமூகத்தொண்டு அவர்கடைப்பிடித்த சமூக விழுமியங்கள் இவற்றுக்கெல்லாம் அடித்தளமாக அமைந்த ஆசிரியத்தும் நினைவு கூரப்படுகின்றது.

மனித நாகரிக வரலாற்றில் ஆசிரியர்களே என்றும் கல்விச் செயற்பாட்டின் நடுநாயகமாகவும், சமூகச் செயற்பாட்டின் குறியீடாகவும் விளங்குகிறார்கள். ஒரு ஆசிரியருக்கு ஆழ்ந்த அறிவு, நுண்ணிய புலமை, துறைபோகக் கற்றல், எப்போதும் கற்றல், சீரிய ஒழுக்கம், மதிநுட்பம், மனனம் செய்யும் திறன் என்பன முக்கிய இலக்கணங்களாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக ஆசிரிய சமூகம் எல்லாக் கால கட்டத்திலும், எல்லோராலும் போற்றப்படும் சமூகமாக காணப்படுகிறது. ஆனால் காலத்தின் தேவை கருதி கல்வியின் நோக்கமும், பணியும் மாற்றமடையும் போது ஆசிரியரின் பங்கும், பணியும் மாற்றம் பெறுவது தவிர்க்க முடியாது போகிறது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்று ஆசிரியத் தொழில் என்பது உலகளாவியரீதியில் வாண்மைத்துவம் மிக்க தொழில்களில் ஒன்றாக நோக்கப்படுகிறது. அதற்கு ஏற்ப ஆசிரியத் தொழிலும் வளர்க்கப்படுகிறது. இன்றைய வாழ்வியலில் ஒரு நாட்டினதும், ஒரு சமூகத்தினதும், ஏன் ஒரு தனிமனிதனதும் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் ஆசிரியர்களே மையப்புள்ளியாக உள்ளனர். இதனால் இன்றைய சமூகத்தில் ஆசிரியருக்குரிய பங்கும், பணியும் பாரம்பரிய கல்வி முறையில் இருந்து பெரிதும் வேறுபடுகிறது. ஆசிரியர்கள் சமூகத் தொழில்பாட்டின் வேகத்தை, மாற்றத்தை தீர்மானிப்பவர்களாகவும், சமூகத்துக்கு வழிகாட்டியாகவும், ஆலோசனை வழங்குபவ ராகவும், மாணவர்களின் மன அழுத்தங்களுக்கு, இடர்பாடுகளுக்கு தீர்வு காண்பவராகவும், நண்பராகவும், புதிய படைப்பாளராகவும், செயற்திட்ட முகாமையாளராகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஒவ்வொரு ஆசிரியனும் அறிவுக்கான, வாண்மை விருத்திக்கான தேடல் உள்ளவனாக இருக்கவேண்டியது காலத்தின் தேவையெனலாம்.

இன்று பலரும் சிறந்த ஆசியருக்குரிய நற்சான்றிதளாக ஆசிரியவாண்மையைக் கருதுகின்றனர் ஆசிரிய வாண்மை என்பதற்கு அறிஞர்கள் குறிப்பாக கல்வியாளர்கள் பலநிலைப்பட்ட வரைவிலக்கணங்களைக் கொடுக்கலாம். ஆயினும் இவற்றை பொதுவாகவும் சுருக்கமாகவும் மதிநுட்பம்மிக்க கல்வியையும், பயிற்சியையும் அடிப்படையாகக் கொண்ட ஆசிரியத் தொழில் எனக் கூறிப்பிடலாம். அதை இன்னொரு வகையில் பார்ப்பதானால் திறன்மிக்க சேவையை அல்லது மதியுரையை மாணவர்களுக்கு அல்லது சமூகத்துக்கு அல்லது தம்மைத் தேடி வருவோருக்கு வழங்கும் தொழில் எனவும் கூறலாம். ஆனால் வாண்மை என்பது ஆரம்பத்தில் மதப்போதனையில் ஈடுபடுகின்ற மதப்போதகர்கள் தமது பணியில் மேலான அறிவும், ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டவர்கள் என்ற கருத்தில் இருந்தே தோன்றியது. இன்று அதை ஆசிரியரிடமும் எதிர்பார்க்கிறோம். இந்த வாண்மை என்ற சொல்லில் மேலான அறிவு என்பதற்கு அப்பால் ஆழ்ந்த ஈடுபாடும்

அவசியம் என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. இன்று ஆசிரிய சமூகம் தமது மேலான அறிவு அல்லது குறிப்பிட்ட துறையில் தமக்குள்ள புலமைக்கு தாம் பல்கலைக்கழகங்களிலும், ஆசிரிய கலாசாலைகளிலும் பெற்ற பட்டங்களைச் சாட்சியாகக் கூறலாம். இக் கல்விசார் பட்டங்கள் ஆசிரியவாண்மையில் உள்ளடக்கப்படும் உயர்ந்த, நிரந்தர ஊதியத்தைப் பெறவும் உதவலாம். இந்நிலையை நாமும் மறுக்கவில்லை. ஆனால் இவைமட்டும்தான் ஆசிரியவாண்மையின் அடையாளமாக இருக்கமுடியாது என்று கூற முனைகின்றேன். திருக்குறளிலும், திருமந்திரத்திலும் போதிக்கப்பட்ட கல்வி அறிவும், ஆன்மீக விழுமியங்களும் இன்று பாடசாலைகளில் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் அறிவு முதிர்ச்சிக்கும் போதிக்கப்படுகின்றன. மேலும் பல்கலைக் கழகங்களில் பலர் அறிவு முதிர்ச்சியின் உயர் அடையாளமான கலாநிதிப்பட்டத்தைப் பெறுவதற்கு இந்நூல்களையும் அவற்றில் காணப்படும் அறிவுப் பரப்பையும் விழுமியத் தேக்கங்களையும் தமது ஆய்வுக்குரிய கருப்பொருள்களாகவும் சில இடங்களில் அடிப்படைத் தரவுகளாகப் பயன்படுத்துகின்றனர். இத்தனைக்கும் இந்நூல்களை எழுதிய திருவள்ளுவரும், திருமூலரும் எந்தப் பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்றவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் படைத்த நூல்களை நாம் உயர்ந்த நிலையில் வைத்துப் பார்ப்பதற்கு அவர்களிடம் இருந்த மேலான அல்லது முதிர்ச்சியான அறிவு என்பதற்கு அப்பால் அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்ட துறையில் காட்டிய அக்கறையும் அதனால் ஏற்பட்ட ஆழ்ந்த ஈடுபாடுமே அவர்கள் படைத்த நூல்களை உயர்ந்த அறிவுப் பெட்டகங்களாக பார்ப்பதற்குக் காரணமாகும். இங்கிருக்கும் ஆசிரியர்கள் கல்வியாளர்கள் குறிப்பிட்ட துறையில் மேலான அறிவைப் பெற்றவர்கள், பெற்றுக்கொள்வதற்கான தேடலையுடையவர்கள் என்பதில் எனக்கு எந்த ஐயமில்லை. ஆனால் அந்த அறிவைத் தொடர்ந்து வளர்ப்பதென்பது அதில் நீங்கள் காட்டும் அக்கறையிலும், ஈடுபாட்டிலுமே தங்கியுள்ளது. அப்போதுதான் நீங்கள் வாண்மையுள்ள கல்வியாளராக வளர்ந்து

எமது சமூகத்திற்கு பயனுள்ளவர்களாகவும் சமூகச் சிற்பிகளாகவும் மிளிரமுடியும்.

உயர்ந்த எதிர்கால வாழ்க்கையைப் பெறுவதற்கான அத்திவாரத்தை முன்கூட்டியே தீர்மானிக்கும் ஆற்றல் யாழ்ப்பாண ஆசிரிய சமூகத்துக்கு இருந்ததாகப் பலமானதொர் கருத்து கடந்த காலத்தில் எமது சமூகத்தில் இருந்துள்ளதென்று பலரும் கூறுவதுண்டு. இதற்கு 1950-1970 காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டம் பெற்ற யாழ்ப்பாண இளைஞர்களின் பெற்றோரில் பலர் ஆசிரியர்களாக இருந்தமையை சான்றாகக் கூறப்படுவதுமுண்டு . இதை இவ்விடத்தில் நான் கூறுவதற்கு முக்கிய காரணம் இன்றைய நவீன உலகில் "எதிர்காலவியல்" என்பது முக்கிய பாட நெறியாக, ஓர் ஆய்வுப் புலமாக பாடசாலை தொட்டு பல்கலைக்கழகம் வரை வளர்ந்து வருகிறது. இதன் நோக்கம் இன்றைய செயற்பாடுகளின் நாளைய விளைவுகளை ஆராய்வதும், நாளைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப இன்றைய செயற்பாடுகளைத் திட்டமிடுவதாகும். மேற்குலக நாடுகளில் ஆரம்பித்த இக்கற்கை நெறி அண்மைக் காலங்களில் யப்பான், சீனா போன்ற நாடுகளிலும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதால் அவை எதிர்காலத்தில் இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்படலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதன் வெற்றி என்பது வாண்மையுள்ள ஆசிரியர்களின் பெருக்கத்திலும், ஈடுபாட்டிலும் தங்கியுள்ளதை உங்களுக்கு நினைவுபடுத்துவதே ஆகும்.

மாணவர்களுக்கு அறிவைப் புகட்டும் ஆசிரியர்கள் காருண்ணியத்தையும், நல்லொழுக்கத்தையும் போதிப்பவராகவும் இருக்க வேண்டும். இதனால்தான் எமது மதங்கள் கல்வியின் இறுதி இலக்கு மனித விழுமியங்களை வளர்த்தெடுப்பதாக இருக்க வேண்டும் எனக் கூறுகின்றன. சமூக உயர்வுக்குத் தேவையான திறன்களையும் விழுமியங்களையும் உடைய மாணவ சமுதாயத்தை உருவாக்குவதே பாடசாலைகளின் நோக்கமும்

ஆகும். பண்பாடு இல்லாத புலமை பெறுமதியற்றது. பண்பாடும் கல்வியும் இணையும் போதுதான் மனித வாழ்வு மேம்படுகிறது. இதற்கு ஆசிரியர்கள் நல்லவர்களாக, உணர்வுள்ளவர்களாக, மனதநேயம்மிக்கவர்களாக இருக்க வேண்டும். அவர்களால்தான் தம்மிடமுள்ளதைப் பிறருக்கு கொடுக்கமுடியும். ஒருவருக்கு ஞானமில்லாவிட்டால் அவரால் அறிவின்மையைத்தான் கொடுக்க முடியும். ஒருவரிடம் மகிழ்ச்சி இல்லாவிட்டால் அவரால் இன்னொருவருக்கு மனமுடைந்த நம்பிக்கையைத்தான் கொடுக்க முடியும். இதற்கு கற்றவரிடமும், கற்பிப்பவரிடமும் மனித நேயம் இல்லாவிட்டால் ஏற்படும் அழிவுக்கு யப்பானிய ஆசிரியர் ''கயிம்'' என்பவர் கூறிய அனுபவத்தை இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது சிறையில் இருந்து தப்பிய அவ்வாசிரியர் தான் நேரில் பார்த்த கொடூரமான சம்பவத்தைப் பின்வருமாறு கூறுகிறார். எனது கண்முன்னே பலகோடி மக்கள் சிறையில் அடைக்கப்பட்டு அதற்குள் நச்சுவாயு செலுத்தப்பட்டது. அந்த நச்சுவாயு அறையை அமைத்துக் கொடுத்தவர்கள் மெத்தப்படித்த பொறியியலாளர்கள். அச்சிறைக்குள் சிறுவர்களுக்கு நஞ்சூட்டிக் கொன்றொழித்தவர்கள் வேறு யாருமில்லை நன்கு படித்த மருத்துவர்கள், நன்றாகப் பயிற்றப்பட்ட தாதியர்கள். சிறுவர்களையும் பெண்களையும் சுட்டுக் கொன்றார்கள். கொன்றவர்களுக்கு அனுசரணையாக இருந்தவர்கள் பள்ளிக்கூடங்களிலும் , பல்கலைக்கழகங்களிலும் பாடம் போதித்த ஆசிரியர்கள், பேராசிரியர்கள். இவற்றை எல்லாம் கண்ணீர் மல்க எழுதிய அவ்வாசிரியர் இறுதியில் கற்றவர்களைப்பார்த்து மனிதநேயமிக்க மாணவ சமூகத்தை உருவாக்க முன்வருமாறு அறைகூவல் விடுக்கிறார். அதையே நானும் பேராசிரியர் துரைராசாவின் பெயரால் இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு ஆசிரியர் தன்னிடம் கற்கும் மாணவர்களின் ஆற்றல்களை, தனித்துவத்தை அடையாளம் கண்டு அவற்றை வளர்க்க உதவுவராக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில்

ஆசிரியர்கள் தாம் சொல்லிக் கொடுப்பதையே மாணவர்களும் திருப்பிச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் மாணவர்கள் எல்லோரும் ஒரே அறிவு, ஆற்றலோடு குறிப்பிட்ட ஒரு வகுப்பில் கற்பவர்கள் அல்ல. ஒவ்வொருவரிடமும் வேறுபட்ட ஆற்றல், திறமை இருக்கலாம், ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததையே மாணவர்கள் அப்படியே திருப்பிச் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது மாணவரின் தனித்துவமான ஆற்றலை மழுங்கடிக்கச் செய்வதாக அமையும். கல்வி என்பது சில தரவுகளை மணவர்களுக்கு திணிப்பதாக இருக்க கூடாது. மாறாக அவர்களின் ஆற்றல்களை வெளிக்கிளம்பச்செய்யும் தூண்டியாக இருக்கவேண்டும். ஆங்கிலத்தில் "Education" என வரும் சொல் "Educare" என்ற லத்தீன் சொல்லின் அடியாகப் பிறந்தது. இதன் பொருள் "வழிகாட்டுதல்" என்பதாகும்.. ஆகவே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுபவராகவும் இருக்க வேண்டும் என சமூகம் எதிர்பார்ப்பதில் தவறேதும் இருக்கமுடியாது.

ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய வாண்மை, பண்பு, ஆசிரியத்துவம் பற்றி இவ்விடத்தில் கூறிய நான் அவற்றை அடைவதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை பற்றியும் கூறவேண்டும். அவற்றைத் தவிர்ப்பது எனது கருத்தை நீங்கள் ஒரு பக்கச் சார்பானதாக கருத இடமளிக்கலாம். இன்று பலராலும் பேசப்படும் உலகமயமாக்கம், நவீனத்துவம், தொழில்நுட்ப மயமாக்கம் என்பதெல்லாம் ஏனைய நாடுகளை விட வளர்முக நாடுகளின் அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு என்பவற்றில் பாரிய மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றால் நன்மை என்பதை விட வளர்முக நாடுகளுக்கு தீமை என்ற எதிர்வாதமும் வளர்ந்து வருகிறது. இதற்கு கல்வியும் விதிவிலக்கல்ல. இன்று உலக வங்கி, ஆசிய வங்கி போன்ற நிறுவனங்கள் தாங்கள் விரும்பும் கல்வி முறையை மூன்றாம் உலக நாடுகளில் நடைமுறைப்படுத்த கோடிக்கணக்கில் பணத்தை அள்ளி வீசுகின்றன. இப்பணம் எமக்கும் வந்து சேருகின்றன. இப்பணத்தில் பல கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள்,

செய்முறைப் பயிற்சிகள் என்பன ஆசிரியர்களுக்கு நடாத்தப்படுகின்றன. அதில் குக்கிராமம் தொட்டு நகரம் வரை உள்ள பாடசாலை ஆசிரியர்கள் பங்கெடுக்கின்றனர். அவற்றில் ஆசிரியர்கள் தவறாது பங்கெடுக்க வேண்டும் எனவும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இவற்றின் மூலம் ஆசிரிய வாண்மை விருத்தி அடைவதாக பிரசாரம் செய்யப்படுகிறது. அதற்கு அடையாளமாக ஆசிரிய கல்வி விருத்தியில் நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் அவற்றை மாணவர்களுக்கு நடைமுறைப்படுத்திக் காட்ட அனைத்துப் பாடசாலையிலும் வசதிகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதனால் ஆசிரியர்கள் அடையும் ஆசிரிய வாண்மை என்பது ஆசிரியர்களுக்குள்ளேயே அடங்கி விடுகின்றன.

இன்று குறிப்பிட்ட துறையில் புலமையும், பயிற்சிகளும் பெற்ற ஒருவர் தனது அறிவை தன்மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவலோடு ஆசிரியத் தொழிலில் இணைந்து கொள்ளுகிறார். ஆனால் அவர்கள் எல்லோருக்கும் அவர்களின் ஆற்றலுக்குப் பொருத்தமான வகுப்புக்கள் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. உதாரணமாக விஞ்ஞானப்பட்டதாரி ஒருவருக்கு பாலர் வகுப்புக்களே கற்பிப்பதற்குரிய வகுப்பாக ஒதுக்கப்படுவதை இங்கு குறிப்பிடலாம். இதனால் நாம் எதிர்பார்க்கும் ஆசிரிய வாண்மை என்பதை நாமே அர்த்தமற்றதாக்கி விடுகிறோம். இதை யெல்லாம் நாம் ஆசிரியரின் குற்றமாகப் பார்க்க முற்படக் கூடாது.

இறுதியாக மிகுந்த பெருமிதத்துடன் இந்த நிகழ்வில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த யுதத்த சூழலில் பல இடர்கள், பல இடப்பெயர்வுகள் மத்தியில்தான் எமது பிரதேச கல்வி வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் யாழ்ப்பாணத்தைத் தனித்து அடையாளப்படுத்தும் கல்விப் பாரம்பரியம் இத்தகைய இடர்ப்பாடுகளின் மத்தியிலும் தொய்ந்து போனதாக எனக்குத் தெரியவில்லை. இதற்கு ஆசிரியர்கள் பலரின்

அர்ப்பணிப்புடன் கூடிய சேவை முக்கிய காரணம் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. அதாவது பெற்றோரும், பிள்ளைகளும் கல்வியில் காட்டிய அக்கறை மட்டுமல்ல ஆசிரியர்களது கற்பித்தல் திறனும், சேவை மனப்பான்மையும் முக்கிய காரணமாகும். இவைகள் எல்லாம் அசாதாரண சூழ்நிலையிலும் ஆசிரிய சமூகம் படைத்துவரும் மகத்தான சாதனைகளாகும். இதுதான் வலுவான ஆசிரியத்துவத்தின் குறிகாட்டி எனலாம் .மேலும் ஆசிரியத்துவத்தின் இப்படியானதோர் நிலையை ஊக்குவிப்பதைத்தான் பேராசிரியர் தனது இறுதிக் காலத்தில் இலக்காகக் கொண்டிருந்தார். எனவே இச்சாதனைக் குரிய யாழ்ப்பாண ஆசிரிய சமூகம் இந்த நன்னாளில் பெருமிதம் கொள்ளலாம் என்று கூறுவதுடன் ஆசிரியத்துவத்துடன் சேர்ந்த இன்னுமோர் பிரதானமான விடயத்தையும் இங்கு கூற விரும்பு கின்றேன்.

ஆரம்ப காலத்தில் மனிதனொருவன் அறிவுப் பசியைத் தீர்க்கவும், புதியவிடயங்களை அறியும் ஆவலாலும் கல்விகற்றான். பிற்காலத்தில், இவற்றுடன் சமூகத்தில் தொழில்வாய்புக்களைப் பெறுவதற்காகவும் தொழில்நுட்ப வசதிகளை அறிந்து கொள்ளவும் கல்வியைக் கற்க ஆரம்பித்தான். இன்று ஒவ்வொரு மனிதனும் இந்த நவீன உலகத்தில் சீவிப்பதற்காகவும் கற்கவேண்டியவனாக இருக்கின்றான். இன்று உலகபொருளாதாரம் அறிவு அடிப்படையானது. அறிவடிப்படியான உலகத்தில் சிறப்பாக வாழ்வதற்கு மனிதனொருவன் அறிவுடன் இன்னும் பல திறன்களையும் உடையவனாக இருக்கவேண்டும். இவற்றுள் சில திறன்கள் மனிதனுடன் உடன் பிறப்பவை ஏனையவை அவன் கற்கும் காலத்தில் வளர்த்தெடுக்கப்படவேண்டியவை. குறிப்பாகத் தொடர்பாடற்திறன், குழுவாகத்தொழிற்படும்திறன், தலைமைத் துவத்திறன், தாமாக புதியவற்றை தேடும்திறன், பிரச்சனைகளை தீர்க்கும் திறன், முடிவுகள் எடுக்கும் திறன் பெறுப்பேற்கும் தன்மை போன்றவை பாடசாலைகளால் வளர்தெடுக்கப்பட வேண்டியவை. இதுதான் கல்வியின் பிரதான நோக்கமாகும். ஆசிரியத்துவமும்

இதனை வரவேர்க்குமென நம்புகின்றேன். எனவே மதிப்புக்குரிய ஆசிரியர்களே பாடசாலைகளில் கல்வியைக் கற்பிக்கும் முறைகள் இவற்றை வளர்ப்பனவையாக அமையவேண்டும். கற்பிக்கும் முறைமை ஆசிரியரை மையப்படுத்தாமல் மாணவர்களை மையப்படுத்துவதாக, குழுவாக அறிவை தேடுதலை ஊக்கப்படுத்துவதாக அமையின் மேற்குறிப்பிடப்பட்ட திறன்கள் வளர்த்தெடுக்கப்பட வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு வகுப்பு மாணவர்களை நாலு அல்லது ஐந்து குழுக்களாகப் பிரித்து ஒரு விடயத்தைக் குழுவாகக் கற்கத் சந்தர்ப்பம் உண்டாக்கும் போர்து, குழுவாகக் கற்றவற்றை ஏனைய குழுக்களுடன் பகிரத் தூண்டும்போது மேற்குறிக்கப்பட்ட திறன்களை மாணவர்கள் தாமாகவே வளர்த்தெடுக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். மேலும் வெளிக்களப் பயிற்சிகளினூடாகவும் ஆய்வுகூடக்கற்கைமுறைகள், பாடத்திட்டத்திற்கு புறம்பான சிலபாடசாலை செயற்பாடுகள் ஊடாகக்கூட இத்திறன்களை வளர்க்க முடியும். ஆசிரியர்களே பாடத்திட்டக் கல்வியுடன் தொழில் வாய்ப்புக்குத் தேவையான மேற்கூறப்பட்ட திறன்களையும் சேர்த்து மாணவர்களுக்கு ஊட்டும் போர்துதான் மாணவர்கள் கல்வியின் உச்சக்கட்ட பயனைப் பெறுவார்கள். மேலும் இத்திறன்களை கற்றலினூடாக வளரத்தெடுப்பது காலத்தின் தேவையாகும், அத்துடன் எமது கடமையுமாகும். ஆசிரியத்தின் சீரிய பணியுமாக அமையுமெனலாம்.

நவீன கல்விக் கொள்கைகள், பாடசாலையொன்றின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னேற்றகரமானதாக அமைவேண்டுமெனில் இச்செயற்பாடுகளுக்குப் பெறுப்பான ஆசிரியர்கள் தம்மைப் பற்றி தமது செயற்பாடுகள் பற்றி சுயமதிப்பீடு செய்தல் அவசியம் என்று வலியுறுத்துகின்றன. ஆசிரியர்களே, உங்கள் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடையதாகவும் விளைதிறன் கூடியதாகவும் இருப்பதற்கு நீங்கள் உங்கள் கற்பித்தல்

செயற்பாடுபற்றியும் நீங்கள் பொறுப்பாக உள்ள வகுப்பு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பற்றியும் தரவுகள் அடிப்படையிலான சுய மதிப்பீடு செய்தல் மிகவும் அவசியம் . ஆசிரியன் ஒருவன் தன்னைப் பற்றி சுயமதிப்பீடு செய்யும் போது அவன் தனது பலத்தையும் பலவீனத்தையும் எடைபோடக் கூடியவனாக இருப்பான். ஆசிரியத்தை மதிக்கும் ஆசிரியன் ஒருவன் தானகவே தனது பலவீனத்தை நீக்க முயற்சிப்பான் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. தனது பலம், பலவீனத்தை உணர்ந்து கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதாலும் தனது பலவீனத்தை சீர்செய்வதற்கு முயற்சிப்பதனாலும் வகுப்பில் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னேற்றகரமானதாக்கலாம். வகுப்பு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதன் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளின் குறை நிறைளையும் அறியமுடியும். இதன் மூலமும் வகுப்புக்கான கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிடுவதன் மூலமும் குறைகளைக் நிவர்த்தி செய்ய முயற்சிப்பதன் மூலமும் நிறைவுகளை கற்பித்தலுக்கு சாதகமாக்குவதன் மூலம் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்த முடியும். பாடசாலையின் ஒட்டு மொத்தமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைப் பற்றியும் தரவுகள் அடிப்படையிலான மதிப்பீடுகள் செய்தலும் மிகவும் அவசியமாகும். இந்த மதிப்பீடு அதிபரினால் மட்டுமோ அல்லது அதிபரும் பிரதி அதிபர்களும் சேர்ந்த சிறியதோர் குழுவால் மட்டுமோ செய்யப்படல் பயனள்ளதாக அமையாது. ஆசிரியர் குழுவொன்று இம்மதிப்பீட்டை செய்வதுதான் நல்லது. இக்குழுவில் முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தக்கூடிய கனிஸ்டதர ஆசிரியர்களும் இருக்க வேண்டும். வருடாவருடம் இவ்வகையான மதிப்பீடுகளைச் செய்து பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதன் மூலம் வினைத்திறனும் விளைதிறனும் உடைய பாடசாலையாக மாற்றமுடியும். இன்னோர் விடயத்தையும் நவீன கல்விக் கொள்கைகள் வலியுறுத்துகின்றன. இது யாதெனில் ஆசிரியர் ஒருவரின் கற்பித்தல் செயற்பாடு அவரின் சக ஆசிரியர் ஒருவரால்

மதிப்பீடு செய்யப்பட்டு அறிவுறுத்தப்படலாகும். எமது சமூகத்தில் இது மிகவும் கடினமானதொர் விடயமாகும். இவ்விடயத்தைச் செயற்படுத்தக்கூடிய மனப்பக்குவம் ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படின் இலங்கையின் கல்வி வரலாற்றில் முன்னேற்றகரமான மாற்றம் என்று கூறமுடியும். ஆசிரியர்களே நல்ல ஆசிரியத்துவத்தைப் பேணுவதற்கு இவ்விடயத்தில் உங்கள் கவனம் செலுத்தப்படும் என நம்புகின்றேன். இதுதான் அமரர் கனவு கண்ட எமது சமூகத்தின் கல்வி உயர்ச்சிக்கும் அமரர் நேசித்த ஆசிரியத்துவத்தின் மேன்மைக்கும் நாம் செய்யும் பணியுமாகுமெனக் கூறி எனது கடமையைச் சரியுறச் செய்த மனநிறைவுடன் முடிக்கின்றேன்.

# ALAGAIAH THURAIRAJAH

Date of Birth November 10,1934.

| | |
|---|---|
| Jan. 1940 – Dec 1950 | American Mission College, Uduppiddy. |
| Jan. 1951 – June 1953 | Hartley College, Point Pedro. |
| July 1953 – July 1957 | Engineering Undergraduate University of Ceylon |
| July 1957 – Mar 1958 | Instructor in Civil Engineering at University of Ceylon. |
| Apr 1958 – Aug 1958 | Junior Assistant Engineer in Public Works Department, Sri Lanka. |
| Oct 1958 – Dec 1961 | Research Student in Soil Mechanics at University of Cambridge under late Prof. K.H. Roscoe worked on shear properties of soils, designed and developed a new model of the Simple Shear Apparatus. |
| Jan 1962 – June 1962 | Assistant Soils Engineer, Terre search Ltd, London. |
| July 1962 | Joined University of Sri Lanka as a Lecturer in Civil Engineering. |
| Sep 1969 – Sep 1970 | Visiting Assistant Professor at University of Waterloo, Canada on Sabbatical Leave. |
| Dec 1971 | Appointed Professor of Civil Engineering at University of Sri Lanka, Peradeniya Capus. |
| May 1975 – Sep 1977 | Dean of the Faculty of Engineering University of Sri Lanka. Paradeniya Capus. |
| Oct 1977 – Dec 1978 | Visiting Professor at University of British Columbia, Canada, on Sabbatical Leave. |
| Feb 1982 – Feb 1985 | Dean of the Faculty of Engineering, University of Peradeniya, Formerly University of Sri Lanka, Paradeniya Campus. |
| From April 1985 | Professor of Civil Engineering, the Open University of Sri Lanka, Newalla, Nugegoda. |
| April 1987 – Aug 1988 | Dean of the Faculty of Engineering Technology. The Open University of Sri Lanka. |
| From Sep 1988 to | Vice – Chancellor, University of Jaffna, |

| | |
|---|---|
| March 1994 | Sri Lanka |
| From 1990 | Member of the Board of Trustees – Janasavija Trust Fund. (Appointed 1990) |
| | Member of the Tertiary & Vocational Education Commission, (Appointed in 1990) |
| From Apr 1994 to June 1994 | Profession of Civil Engineering Open University of Sri Lanka. |

## Academic Qualifications

| | |
|---|---|
| June 1957 | B.Sc. Engineering, First Class Honours, University of Ceylon. First in the batch. |
| June 1962 to | Ph. D. University of Cambridge. |
| 1977 | Elected Fellow of the National Academy of Sciences, Sri Lanka. |
| Post | D.Sc. Open University of Sri Lanka. |
| | D.Sc. University of Jaffna. |
| | "Yarl Mahara Viruddu" – All Ceylon Kampan Kazhakam. |

## Professional Qualifications

| | |
|---|---|
| March 1965 | Member of the Institution of Engineers, Sri Lanka. |
| March 1966 | Member of the Institution of Civil Engineers. London. |
| May 1979 | Fellow of the Institution of Engineers, Sri Lanka. |
| May 1985 | Fellow of the Institution of Civil Engineers, London. |
| Oct 1986-Sep 1989 | Vice-President, Institution of Engineers, Sri Lanka. |
| Oct 1980 Oct 1990 | President, Institution of Engineers, Sri Lanka. |

## Teaching Experience

| | |
|---|---|
| University of Sri Lanka | a) Organized Teaching of Geotechnics to Undergraduates. |
| | b) Organized and development Geote chnics Laboratory. |

c) Organized Teaching of the one year M. Sc. Engineering course in "Soil Mechanics & Foundation Engi neering"

University of Waterloo.

a) Taught undergraduate course Soil Mechanics.

b) Taught graduate course in Earth Structures.

University of British Colombia

a) Taught undergraduate course in soil Mechanics and Foundation Engineering.

b) Taught graduate course in Cons titutive Relations for Soils.

## Research Experience

i) Engaged in research in –

a) Stress – strain properties and strength characteristics of soils.

b) Consolidation and swelling characteristics of soils

c) Engineering properties of residual of Sri Lanka.

ii) Supervised research of graduate students in University of Sri Lanka, University of Waterloo & The Open University of Sri Lanka.

## Consultancy Experience

i) Carried out site investigation, Laboratory testing and preparation of report for a number of foundation problems in Sri Lanka.

ii) Worked as a Consultant for the construction of Heen Ganga Project at Kantalai which consists of an earth dam, Flood protection bundsspilway and irrigation channels, for Sri Lanka Tobacco Industries Corporation.

iii) Worked as soil Consultant for the foundation works of the Urea Fertilizer Plant at Sapugaskanda for State Fertilizer Manufacturing Corporation.

iv) Worked as Foundation Consultant for a housing scheme built on the slopes of Hantane hills in Kandy

v) Served in Technical Committees of the Ministry of Local Government Housing and Construction, monitoring the progress of the construction of many high rise buildings.

vi) Foundation Consultanat for a housing scheme built on marshy lands at Crow Island, Mattakuliya.

vii) soil Consultant to the National Building Research Organization, Sri Lanka.

## Publications


1. Roscoe, K.H., Schofield, A.N., Wroth, C.P. & Thurarajah, A(1962). Correspondence on "The Shear Strength Properties of Calcium illite": by R.E.Olson.
   Geotechnique, vol.12.

2. Roscoe, K.H. Schofield, A.N. & Thurarajah, A (1963). "Yielding of clays in states better than critical."
   Geotechnique, vol. 13.

3. Roscoe, K.H., Schofield, A.N. & Thurairajah, A(1963). "A Critical appreciation of test data for selecting a yield criterian for soils" Proceedings of the symposium on Laboratory Shear Testing of Soils, Ottawa.
4. Roscoe, K.H. & Thurairajah, A(1964). "On the uniqueness of yield surface for wet clays" Proceedings of the Symposium on Rheology & Soil Mechanics, Grenoble.
5. Roscoe, K.H. Schofield, A.N. & Thurairajah, A(1965). Correspondence on "Energy Components during the triaxial test & direct shear tests" by P.W. Rowe, L. Barden & I.K.Lee. Geotechniqe, vol, 15.
6. Thurairajah, A. and Roscoe, K.H.(1965). "the correlation of triaxial, compression test data on cohesionless granular media" Proceeding of the Sixth International Conference on Soil Mechanics & Foundation Engineering, Ontreal.
7. Thurairajah, A. (1967). "One – Dimensional Consolidation characteristics of Thunukkai Clay" Proceedings of the Third Asian Regional Conferences on Soil Mechanics & Foundation Engineering, Haifa.

8. Thurairajah, A. (1970) "A study of the swelling characteristics of a clay" Journal of South East Asian Society of Soil Engineering. Vol. 1
9. Thurairajah, A and Lee Lievre, B. (1971). "Strength deformation of sand during drained triaxial tests" Proceedings of the Fourth Asian Regional Conference on Soil Mechanics and Foundation Engineering, Bangkok.
10. Thurairajh, A. and Lee Lievre, B.(1971) "Undrained shear strength characteristics of sand. Geotechnical Engineering, vol.II.
11. Thurairajah, A. and Sithamparapillai, V.(1972). "Drained Deformation Characteristics of Sand" Geotechnical Engineering, vol III
12. Thurairajah, A.(1973) "Shear Behavior of Sand under Stress Reversal" Proceedings of the Eight International Conference on Siol Mechanics and Foundation Engineering, Moscow.
13. Thurairajah, A.(1975) "Shear Behavior of Sand when subjected to unloading and reloading" Proceedings of the Fourth South East Asian Conference on Soil Engineering, Kuala Lumpur.
14. Thurairajah, A... Balasubramaniam, A.S. & Fonseka, H.D.(1975) "Undissipated pore pressure in triaxial samples of a clay during strain controlled drained tests" Proceedings of the Fifth Asian Regional Conference on Soil Mechanics and Foundation Engineering, Bangalore.
15. Thurairajah, A..... and Balasubramaniam. A.S.(1977) "Prediction of strain rate for drained triaxial tests" Proceeding of the Ninth International Conference on Soil Mechanics and Foundation Conference on Soil Mechanics and Foundation Engineering, Tokyo.
16. Thurairajah, A.(1977) "Engineering Education and Training in Sri Lanka" Seminar on Education. Industry Co-Operation in Engineering Education. Research and Training in South and Central Asia, Shiraz, Iran March,1977.
17. Thurairajah, A. and Byrne. P (1978). Discussion on "Evaluation of critical state line under cyclic loading" by V.K.Khosla and R.D.Singh. Journal of Geotechnical Engineering Division, ASCE, vol.104 No: GT 12.
18. Thurairajah, A. and Wijeyakulasuriya, C.V.(1979) "Consolidation characteristics of Laterite" Laterite" Proceedings of the Sixth Asian Regional Conference on Soil Machanics and Foundation Engineering, Singapore.

19. Thurairajah, A. Wijeyakulasuriya, C.V. and Wijayasurendra, P.(1980) "Preloading of a factory site to control settlements" Proceedings of the Sixth Southeast Asian Conference on Soil Engineering, Taipei, Taiwan.
20. Thurairajah, A. (1980) "Engineering in Management" IEMCEC-FEISEAP. Seminar on Engineering in Management Engineering in Management, Kuala Lumpur, Malaysia, April 1980.
21. Wijeyakulasuriya, C.V. Jayawickrama, P.W. Sahabandu, K.L.S, Wathugala, G.W. and Thurairaja, A (1980) "Stress – strain Properties of compacted clays" Proceedings of Geotech 80, Bombay.
22. Thurairajah, A.(1981) "Constitutive relationships for Soils" Seventyfifth Jubilee Souvenir Volume. Institution of Engineers Sri Lanka, October 1981.
23. Wijeyakulasuriya, C.V. Shanmuganayagam. V, and Thurairajah, A.(1983) "A Study on some metamorphic rocks from Sri Lanka" Proceedings of the Indian Geotechnical Coference, Madras, December 1983.
24. Thurairajah, A. (1983) "The cam clay model" Proceeding of the Symposium and Course on Laboratory & Field Tests and Analysis of Geotechnical Problems. Asian Institute of Technology, Bangkok, December 1983.
25. Thurairajh, A.(1984) "Management of Engineering and Technical Institutions in Sri Lanka "Regional Seminar on Management of Engineering and Technical Institutions, Indian Institute of Technology, Kanpur April, 1984.
26. Thurairajah, A. and Wijayakulasuriya, V(1985) "Sampling and testing of residual soils in Sri Lanka" Sampling and Testing of Residual soils – A Review of International Practice edited by E.W. Brand and H.B. Phillip son Socrpion Press. Hong Kong.
27. Thurairajah, A. Wijayakulasuriya., C.V. and Wimalasena. G(1985). Some Engineering Properties of Samanalawewa Soil" Proceedings of Samanalawewa Soils" Proceedings of the First International Conference on Geomechanics in Tropical Lateritic and Saprolitic Soils. Brazil.

28. Thurairajah, A.(1985) "The Cam clay model" Research in Engineering, Faculty of Engineering, University of Peradaniya.
29. Thurairajah, A Spence, R.A.and Byrne. P.M,(1986) "Strength Deformation characteristics of a marine sediment" Proceedings of the Asian Regional Symposium on Geotechnical problems and Practices in Foundation Engineering, Colombo, February 1986.
30. Thurairajah, A. (1986) "Foundation for over head line supports" Specialty Session Annual Session of the Institution of Engineers, Sri Lanka, October 1986.
31. Thurairajah, A. (1986) "Geotechnical Engineering research in Sri Lanka" Presidential Address Section C, Sri Lanka Association for the Advancement of Science.
December 1986.
32. Thurairajah, A.(1988) "Soil – A Complex Engineering material" IFS – SLAAS Lecture August 1988.
33. Thurairajah, A. (1988) "Critical state soil mechanics" Professor E.O.E. Pereira Commemoration Lectures. Institute of Engineers, Sri Lanka, September 1988.
34. Thurairajah, A.(1988) "Education and Training of Engineers in Sri Lanka" First World Congress on Engineering Education & Training, November, 1988. Nepal.
35. Pannila. I, and Thurairajah, A. (1988) "Engineering behavior of residual soils" Proceedings of the International Conference on Engineering Problems of Regional Soils, Beijing, China, August 1988.
36. Pannila. I, and Thurairajah, A. (1988) "Consolidation behavior of a residual Soil" Proceedings of the Second International Conference on Geomechanics in Tropical Soils, Singapore.
37. Thurairajah, A. (1991) "Tertiary Educations in Development" Presidential Address, Jaffna Science Association, June 1991.

# J/UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE
# PAST PUPIL'S ASSOCIATION
# PARENT BODY

**UDUPPIDDY** **VALVETTITURAI**

**Ex-Official Patron:**
**Mr. K. THARMALINGAM**
*Principal*

**PRESIDENT:**
**Mr. K.SHANMUGASUNDRAM**
*B.Sc(Cey),Dip.in.Ed(Cey)*
*Rtd.Lecturer*

**SECRETARY**
**Mr. P.SURESHKUMAR**
*BBA(HRM SPECIAL)*
*Samurdhi Manager*

**TREASURER**
**Mrs. P.ARULVELNATHAN**
*B.Sc(Peradeniya)*
*Teacher*

**VICE PRESIDENT**

Mr. S.THILLAIYAMPALAM
Rtd. Principal

Mr. T.YOGASAMY
R.td. SLPS 11

**ASST.SECRETARY**

Mr. S. SUBRAMANIAM
Rtd.DLC/ALC

**COMMITTEE MEMBERS**

Mr. R. L. THEEVARAJAH (Depty principal)
Mr. K.GUNASINGAM J.P (I.S.A)
Mr. S.SOORIYAKUMAR (Rtd Teacher)
Mr. P.KUGADAAS J.P B.Com, Dip. in Admin
Mrs. C.SATCHITHANANDHAM (Teacher)
Mr. S.SIVALINGARAJAH (Teacher)
Mr. S.THAYANANDHAN
Mr. N.MAGESWARAN
Mr. A.KARUNAKARAN

*Guru Printers, 39/2, Adiyapatham Veethy, Thirunelvely.*